ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

பிரௌடிவாதத்தாலோ, யுக்திவாதத்தாலோ, மதாவேசத்தாலோ, ஸர்வக்ஞத்வாதி குணங்கள் பொருந்திய ஸர்வேசுவரனை அங்கீகரிக்காமல் அத்தகைய சக்திவாய்ந்தவர் ஒருவரில்லை என்றும் அப்படியிருப்பாரென்று நினைக்கவுமிடமில்லை என்றும் வாதிக்கின்றவராயினும் அவரது ஆக்ஞாஸித்தங்களான வர்ணாசிரம தர்மங்களைச் சரிவர அனுஷ்டித்துவருவராயின்பரமேசுவரன் அவர்களை எப்படியாவது ரக்ஷிப்பாரேயன்றி கைவிட்டுவிடமாட்டார். தன்னைக்கௌரவப்படுத்துவதைவிட சுருதிஸ்மிருதிகளை நம்புவதாலும் அதிற்கூறியபடி நடப்பதாலும் அவைகளைக்கௌரவப்படுத்துவதை பெரிதாக பரமேசுவரன் நினைப்பதாகத் தோன்றுகின்றது. மீமாம்ஸக மதஸ்தர்கள் ஈசுவரனில்லை என்றே ஸித்தாந்தப்படுத்தியிருந்தும்சுருதிகளுக்கு ஸ்வத: பிராமாண்யத்தை ஸ்தாபித்து வர்ணாச்ரமதர்ம வியவஸ்தை செய்ததற்காக அவர்களிடம் அருள்புகிறாரேயன்றி உபேக்ஷைசெய்யவில்லை அதுபோல் நிரீசுவரவாதம் பேசும் ஸாங்கியர்களையும் அனுக்ரஹித்திருக்கிறார். மீமாம்ஸகரைப்போல் ஸாங்கியமதஸதர் சுருதிக்கு ஸ்வத:பிராமாண்யத்தை அங்கீகரிக்காவிடினும் ஏதோ ஒருவிதமாக வேதப்ராம்மாண்யத்தை அங்கீகரித்திருப்பதாகவே அவர்களை அனுக்ரஹிக்கிறாரென்று சொல்லவேண்டியதாகிறது. ஹிரண்யகசிபு, ராவணன், சிசுபாலன் முதலியவர்கள் நேராக தன்னிடத்திலேயே த்வேஷத்தைப் பாராட்டினவர்களாயினும் வேதவாக்யத்தை நம்பி தவம் புரிந்ததற்காகவே அவர்களையும் காப்பாற்றினாரென்பது புராணம் படித்தவர்களுக்குத் தெரிந்ததே. தற்காலத்தியவர்களோ எனில் தங்களது கார்யஸாதனத்திற்காகக் கடவுளைப் போற்றும்படியான பேச்சைப் பேசிக்கொண்டிருந்தும் அவரது ஆக்ஞாரூபமான சுருதி முதலியவைகளின் வாயிலாக ஸித்தாந்தமான வர்ணாச்ரம தர்மங்களை மாத்திரம் அனுஷ்டிக்கப்பிரியப்படாததோடு இராமல் வர்ணாசிரமப் பிரிவினையே அடியோடு அழிந்துவிட வேண்டியதாகவும் ஆசைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அப்படியிருக்கையில் இவர்களுக்கு ஈசுவரப்ரஸாதம் எப்படி ஏற்படப்போகிறது. எவ்வாறு கார்யம் கைகூடப்போகிறது. சிலநாட்களாக இவர்கோஷ்டியார் செய்துவரும் பெருமுயற்சியால் சிலவிடங்களில வர்ணாச்ரம வியவஸ்த சிதருண்டு கிடப்பதையே காரிய சித்தியாய்விட்டதாகவும் இந்தியாவே முன்னேற்றத்தை அடைந்துவிட்டதாகவும் அகமகிழ்ச்சியை அடைந்துகொண்டிருக்கிறார்கள். இது வீணான ஸ்வப்னம், இந்த உண்மையை எவரேனும் உரைப்பாரேயானால் அவரை வைதிகரென்று வைய்யத்தொடங்குகிறார்கள். வைதிகவித்வேஷத்தால் வீணில் பாபத்தைத் தேடிக்கொள்வதைத்தவிர வேறுபயன் யாதுமில்லை என்று சாஸ்த்ரஸித்தாந்தத்தை அவர்கள் மனதில் நன்றாய் படும்படிபுகட்டி பரமேசுவரன் அவர் மீது அருள்புரிவாராக.

சுபம்!

பத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.
ப்ரஜாபதி-ஞூவைகாசி-மீ உகவ

# ஜாதிப்பிரிவினை.

ஜாதிப்பிரிவினையைச் சம்மதிக்காத சிலர் ஜாதிப்பிரிவினைச் சண்டைக்குக் காரணமாகின்றபடியால் அதை அங்கீகரிப்பது ஸமரஸபாவத்திற்கு முற்றிலும் முரண்படக் கூடியதாயிருக்கிறது. அவசியமதை அங்கிகரிக்கவேண்டுமானால் ஆண்ஜாதி பெண்ஜாதி என்ற பிரிவினையை ஒருவாறு ஒத்துக்கொள்ளலாம். வைதிக முறைப்படி வர்ணாசிரமப்பிரிவினையே கூடாது என்பார்கள். ஆண் பெண் என்ற இருஜாதியை ஒப்புக்கொண்டால் அது சண்டைக்கிடமாகாதா அதையும் மாற்றி ஒரே ஜாதியாய் வைத்துக்கொள்ள வேண்டுமென்று இவர் நினைக்கலாம். பிரத்தியக்ஷமாகக் காணப்படுவதும் ஸத்யசங்கல்பனான பகவானுடையசங்கல்பத்தால் கர்மவசத்திற்கேற்றபடி சாஸ்திரசித்தமாயுள்ளதுமான அதை எப்படி மாற்றுவது? யார்மாற்றுவது அது எப்படி? மாற்றக்கூடாததாய் சண்டைக்குங்காரணமாகாததாய் அன்யோன்யானுராகத்திற்கும் ஆனந்தாதிசயத்திற்கும் அனேகவிதத்தில் ஸாதனமானதாய்க் காணப்படுகின்றதோ அதுபோலவேமற்றஜாதிப்பிரிவினையுங்க்ஷேமத்திற்கே ஹேதுவென்று ஒப்புக்கொள்ளவேண்டும். ஸிருஷ்டி ஆரம்பகாலத்தில் ஸர்வசக்தனான ப்ரம்மதேவன் மானஸிகமாகவே மரீசிமுதலியவைகளை ஸ்ருஷ்டித்து இதுபோலவே ஸர்வப்ராஜைகளையும் ஸிருஷ்டிக்கநினைத்தும் முடியாமல்முடிவில்ஸ்திரீபுருஷசம்போகத்தால்பிரஜாவிருத்தியாகுமேயன்றி இப்படிச்செய்வது பிரஜாவ்ருத்திக்கு ஹேதுவாகாதென்று தீர்மானித்து அவ்வாறே பூமண்டலத்தில் பிரஜாவ்ருத்தி செய்யக்கசியபாதிகளுக்குக் கட்டளையிட்டாரென்று புராணப்ரசித்தம். ஆகவே ஸ்திரீபுருஷ பிரிவினையங்கீகரிக்கப்படுவதுபோல் மற்ற ஜாதிப்பிரிவினையும் அங்கீகரிக்கப்பட வேண்டியதே. அங்காவயவங்களின் வேற்றுமை காணப்படுவதால் ஸ்திரீபுருஷபேதத்தை அங்கீகரிக்கிறோம். மற்றதை

ஒப்புக்கொள்வதெப்படி என்று சிலர் சங்கை செய்வார்கள். அங்காவயவங்களெனப்படுவது எது. வெளிப்படையாய்க் காணப்படுவது மாத்திரமா மற்றதுமுண்டா? மற்றவை இல்லையென்று சொல்லகூடியாது. ஆஹாரஸாரமாகப் பரிணமிக்கும் ரஸாக்தாதிகளும் சரீராவயவங்களே. அவை சாத்விகாதி ஆஹாரபேதத்திற்கு தக்கப்படி வெவ்வேறுபட்டனவாகவே காணப்படுகின்றன. அதனாலேற்பட்ட அங்காவயவ பேதங்களும் அதற்குத்தபடியுள்ள ஜாதிபேதமுமில்லை என்று ஸாதித்துவிடத்துணிவது ஸாஹஸமே அன்றி வேறல்ல. ஆகையால் கற்பகோடிகாலமாகக் கொண்டாடப்பட்டு வரும் ஜாதிப்பிரிவினை பிரமாணசித்தமேயன்றி குருட்டுத்தனமாக கற்பிக்கப்பட்டதல்ல. இவ்வுண்மை சாஸ்திர ஆராய்ச்சி செய்தவர்களுக்கு நன்கு புலப்படும். மற்றவர்களுக்கும் ஆத்மசாக்ஷிகமாக தெரிந்திருக்கும். பிடிவாதத்தால் அங்கீகரிக்க மாட்டோமென்ற ஸாஹஸபுத்தியுள்ளவர்களுக்கு ஸர்வாந்தர்யாமியான ஸர்வேசுவரனே ஸத்புத்தி புகட்டுவாராக.

சுபம்!

பத்திராதிபர்.

---

# அத்வைதமதமே வைதிகம்.

(395-வ்து பக்கத்தொடர்ச்சி)

இவ்விதம் வேதத்தினால் விதிக்கப்பட்ட யாகம்முதலியதினால் ஸ்வர்க்கம் முதலிய பலம் உண்டாவதற்கு துவாரகாரணமாயுள்ளதும் யாகம் முதலிய விஹிதகர்மங்களாலுண்டாவதும் பிரத்யக்ஷம் முதலிய பிரமாணங்களுக்குப் புலப்படாததால் அன்வர்த்தமான அதாவது அர்த்தம் பொருந்திய அதிருஷ்டம் என்னும் பெயர்வாய்ந்ததுமாயுள்ள அபூர்வத்தையேதர்மமென்றும் களஞ்சபக்ஷணம் முதலிய நிஷித்தகர்மங்களாலுண்டான துரிதாபூர்வத்தையே அதர்மமென்றும் அது ஆத்மாவின் விசேஷகுணமென்றும் வைசேஷிகர்களும் நையாயிகர்களும் கூறுகின்றனர்கள். மீமாம்ஸக ஏகதேசிகளாய் குருமதாவலம்பிகளான பிராபாகரர்களும் இவ்விதமே அபூர்வம் தர்மமென்கிறார்கள். ஸாங்கியர்கள் யாகாதியனுஷ்டானத்தாலுண்டான மனதின் விருத்திவிசேஷத்தை தர்ம

மென்று சொல்லுகின்றார்கள். பௌத்தர்கள் ஜ்ஞானமாகிய சித்தத்திற்கு ஸமானாகாரமான முன் ஜ்ஞானத்தாலுண்டாகும் சுபவாஸனையே தர்மமென்று உரைக்கின்றார்கள். ஜைனர்கள் தேஹம் முதலிய கார்யத்திற்கு ஆரம்பகங்களாயும் ஸூக்ஷ்மங்களாயும் மூர்த்திமத்துக்களாயும் புண்யவிசேஷத்தாலுண்டானதுகளுமான புத்கலங்களே தர்மமென்று தமது சாஸ்திரங்களில் பிரதிபாதிக்கின்றார்கள். அவர்கள் மதத்தில் புத்கலமென்று பரமாணுக்களைக் கூறுகின்றார்கள். இவ்விஷயம்

अन्तःकरणवृत्त्यादौ वासनायाश्चचेतसः ।
पुद्गलेषुचपुण्येषु नृगुणेऽपूर्वजन्मनि ॥

"அந்தக்காணத்தின் விருத்தி முதலியதிலும் சித்தத்தின் வாஸனையிலும் புண்யங்களாகிய புத்கலங்களிலும் ஆத்மாவின் விசேஷ குணத்திலும் அபூர்வத்தின் உத்பத்தியிலும் அந்தந்தமதஸ்தர்களால் தர்மபதமானது பிரயோகிக்கப்படுகின்றது" என்றும் வார்த்திகத்தில் கூறப்பட்டிருக்கிறது. இவ்விதம் வாதிகளால் கூறப்படும் அபூர்வம் முதலியதில் லோகத்தில் தர்மம் என்னும் பதமானது பிரயோகிக்கப்படுகிறதில்லை. பின்னையோவெனில் அபூர்வத்திற்குக் காரணமாயுள்ள யாகம் முதலிய விஹிதகர்மங்களில்தான் லோகத்தில் தர்மபதப்பிரயோகம் காணப்படுகின்றது. எப்படியெனில் லோகத்தில் யாகம் முதலிய வேதவிஹிதகர்மங்களைச் செய்யும் வைதிகஸார்வபௌமனைக்கண்டு இவர் தர்மத்தைச் செய்கின்றவர் என்று பிரஜைகள் உபஸர்ப்பணம் செய்கின்றார்கள்' என்று சுருதியும் அனுவதித்திருக்கின்றது இவ்விதம் லோகத்தில் இவர் தார்மிகர் என்று வியவஹரிப்பது யாகம் முதலிய கர்மத்தை வைத்துத்தான், அபூர்வத்தை வைத்து இல்லை லோகமானது யாகத்தைத்தானே கண்ணால்பார்த்திருக்கின்றது அதனால் உண்டாகிய அபூர்வத்தை அதுபார்க்கவில்லையே அபூர்வம் ஒன்று உண்டு என்பது கூட ஸாமான்ய ஜனங்களுக்குத்தெரியாதல்லவா? ஆகையால் அபூர்வத்தை முன்னிட்டு இவர் தார்மிகன் என்று லோகம் எப்படி வியவஹரிக்கக்கூடும். ஆதலால் யாகம் முதலியதைச் செய்பவனைப் பார்த்து இவன் தார்மிகன்என்று வியவஹரிக்கும் லோகானுபவத்தால் யாகம் முதலியதே தர்மம் என்னும் பதத்திற்குப் பொருள். இக்கருத்து

अन्यत् साध्यमदृष्टं च यागादौ ननुतिष्ठतः ।
धार्मिकत्वसमाख्यानं तद्योगादितिगम्यते ॥

"யாகத்தாலுண்டாகிய அபூர்வம் என்னும் மற்றொரு வஸ்துவைப் பாராமலே லோகம் யாகம் முதலியதைச் செய்பவனைத் தார்மிகன் என்று கூறுவது யாகம் செய்ததை வைத்து என்று தெரிகிறது" என்று வார்த்திகத்திலும் விளக்கப்பட்டிருக்கிறது.

योहियागमनुतिष्ठति तं धार्मिक इति समाचक्षते । यश्चयस्यकर्ता सतेनव्यपादिश्यते यथापाचकोलावक इति । तेन यःपुरुषं निःश्रेयसेनसंयुनक्ति स धर्मशब्देनोच्यते । न केवलं लोके । वेदपि - यज्ञेनयज्ञमयजन्त-देवाः । तानिधर्माणि प्रथमान्यासन् । इति यजतिशब्दवाच्यमेव धर्मं-समामनन्ति ॥

"எவன் யாகம் செய்கின்றானோ அவனைத் தார்மிகன் என்று சொல்லுகின்றார்கள். எவன் எதைச்செய்கின்றானோ அவன் அதனால் வியபதேசிக்கப்படுகின்றான். எவ்விதம் சமயல் செய்பவன் அதன் பெயரால் பாசகன் என்றும் நெல்முதலியதை அறுப்பவன் லவனம் செய்வதால்லாவகன் என்றும் அழைக்கப்படுகின்றானோ அதுபோல்யாகம்செய்பவனை தார்மிகன்என்றுகூறுவதால்புருஷனை சிரேயஸ்ஸோடுவசேர்ப்பிக்கும் யாகம் முதலியகர்மமேதர்மசப்தத்தால் சொல்லப்படுகின்றது. லோகத்தில் மாத்திரமில்லே, வேதத்திலும் யக்ஞத்தால் யக்ஞரூபியான பரமேசுவரனை ஸிருஷ்டியின் துவக்கத்தில் தேவதைகள் ஆராதித்தார்கள். அந்த யக்ஞங்களே முதலாவதான தர்மங்களாயிருந்ததுகள் என்று யாகமே தர்மம் என்றுசொல்லப்படுகின்றது" என்று சாபரபாஷ்யத்திலும் சிரேயஸ்கரபாஷ்யம்என்னும் கட்டத்தில் சபரஸ்வாமியால் கூறப்பட்டிருக்கிறது. இவ்விதமே „தர்மத்தைச் செய்'' என்று செய்யப்படுவதாகிய யாகத்தில் தர்மபதம் தைத்திரீய உபநிஷத்தில் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. धर्मःस्वनुष्ठितः पुंसां தர்மமானது நன்கு அனுஷ்டிக்கப்பட்டுக்கொண்டு அனுஷ்டிக்கும் புருஷர்களுக்கு சிரேயஸ்ஸை அளிக்கின்றது என்று அனுஷ்டிக்கப்படும் யாகத்திலேயே தர்மபதமானது புராணங்களிலும்விநியோகிக்கப்படுகிறது யாகந்தானே அனுஷ்டிக்கப்படுவது, அபூர்வம் அனுஷ்டிக்கப்படாது, அனுஷ்டிக்கப்படும் யாகத்தால் உண்டாவது. ஆகையால் மேல்காட்டிய பிரமாணங்களால் யாகம் முதலியதே தர்மம், அபூர்

வம் தர்மமன்று, மேலும் தர்மம் என்னும் பதமானது பிரீதி என்னும் பொருளுடைய த்ருஞ் என்னும் தாதுவின்மேல் ஸாதனம் என்னும் பொருளுடைய மக் என்னும் பிரத்யயம் வந்து தர்மம் என்று ஏற்பட்டு யோகசக்தியால் பிரீதிஸாதனம் அதாவது இஷ்டஸாதனம் என்று பொருளுடையது. யோகசக்தியால் அர்த்தத்தைத் தெரிவிக்கும் பதம் லௌகிகமெனப்படும் காரணப்பெயரென்றபடி. யோகசக்தியாவது பதங்களிலுள்ள அவயவங்களைப் பிரித்து அர்த்தம்கூறுவது. ஈண்டு தர்மபதத்திற்கு யோகசக்தியை மாத்திரம் ஒப்புக்கொண்டால் போஜனம் முதலியதும் இஷ்டஸாதனமாயிருப்பதால் அதிலும் தர்மபதப்பிரயோகம் ஏற்படட்டும் என்று கேள்விப்படுவதால் தர்மபதத்திற்கு வேதத்தால் தெரிவிக்கப்படுவதாகிய யாகம்முதலியதில் ரூடிசக்தியையும் ஒப்புக்கொள்ள வேண்டும். ரூடிசக்தியால் அர்த்தத்தைத் தெரிவிக்கும் பதம் ரூடமெனப்படும். இடுகுறிப்பெயரென்றபடி. ரூடிசக்தியாவது பதத்தின் அவயவங்களைப் பிரிக்காமல் மொத்தமாய் அர்த்தம் கூறுவது தர்மபதத்திற்கு போஜனம் முதலியதில் யோகசக்திமாத்திரமிருந்தாலும் ரூடிசக்தியில்லாததால் தர்மபதம் போஜனம் முதலியதில் பிரயோகிக்கப்படுகிறதில்லை. பங்கஜம் என்னும் பதம் சேத்திலுண்டானது என்னும் யோகசக்தியிருந்தாலும் ரூடிசக்தியில்லாததால் ஆம்பல் முதலியதில் பிரயோகிக்கப்படாமல் இரண்டு சக்தியுமுள்ள தாமரஸபுஷ்பத்தில் மாத்திரம் பிரயோகிக்கப்படுவதுபோல் இவ்விதம் யோகரூடமான தர்மபதமானது இரண்டு சக்திகளாலும் சேர்ந்து இஷ்டஸாதனமென்று வேதத்தால் தெரிவிக்கப்படுவது என்று பொருளுடையதாயிற்று. வேதத்தால் இஷ்டஸாதனம் என்று தெரிவிக்கப்படுவது யாகமேதவிர அபூர்வமன்று. அபூர்வம் கீழ்க்காட்டிய பாட்டஸித்தாந்தப்படி **यजेतस्वर्गकामः** என்னும் வாக்யத்தில் ஒரு பதத்தாலேயும் தெரிவிக்கப்படவில்லையே. கேவலம் சுருதார்த்தாபத்தியென்னும் பிரமாணத்தால் கல்பிக்கப்படுகின்றது என்று முன் கூறியுள்ளோம். ஆதலால் வேதத்திலுள்ள விதிவாக்யத்தால் இஷ்டஸாதனம் என்று போதிக்கப்படுவதாகிய யாகம் முதலியதே தர்மபதத்தால் யோகரூடியால் தெரிவிக்கப்படுவது யோகசக்திக்கு விஷயமாகாத அபூர்வமென்று பிராபாகாமதத்தில் லிங் என்னும் பதத்தால் அபூர்வம் போதிக்கப்படுவதாயிருந்தாலும் அதில் கீழ்காட்டிய பிரமாணங்களால் தர்மபதவியவ

ஹாரம் இல்லாததால் அது தர்மமன்று யாகம் முதலியதே தர்மம். ஈண்டு ஓர் ஆசங்கை, அதாவது யாகம் முதலியதே தர்மமாகுமானால் அது 'பிரத்யக்ஷத்தாலேயே அறியப்படுகிறபடியால் தர்மம் பிரத்யக்ஷம் முதலியதால் அறியக்கூடியதில்லை, கேவலம் வேதத்தால்மாத்திரம் அறியக்கூடியது என்று முன்தர்மலக்ஷணம் கூறுமிடத்தில் சொல்லியிருப்பது பொருந்தாது. அபூர்வம் தர்மமாயிருக்குமானால் அது பிரத்யக்ஷம் முதலியதால் அறியப்படாததால் பொருந்தும். ஆகையால் அபூர்வமே தர்மம் யாகம் முதலியதன்று என்று. இதற்கு ஸமாதானம் கூறுவராம். பிரத்யக்ஷத்தால் காணப்படும் யாகம்முதலியதே ஸ்வரூபத்தினால் தர்மமன்று. பின்னையோவெனில் ஸ்வர்க்கம் முதலிய இஷ்டத்திற்கு ஸாதனமாயிருக்கும்தன்மையோடு கூடிய யாகம் முதலியதே தர்மம். யாகம் முதலியது பிரத்யக்ஷத்தால் அறியப்பட்டாலும் அது ஸ்வர்க்கம் முதலிய இஷ்டத்திற்கு ஸாதனமென்று வேதமில்லாமல் பிரத்யக்ஷத்தால் அறியப்படாததால் அத்தன்மையோடு கூடிய யாகம் முதலியதில்தர்மலக்ஷணம் பொருந்துமென்று கண்டுகொள்க.

द्रव्यक्रियागुणादीनां धर्मत्वं स्थापयिष्यते ।
तेषामैन्द्रियकत्वेपि नताद्रूप्येणधर्मता ॥
श्रेयःसाधनताह्येषां नित्यं वेदात् प्रतीयते ।
ताद्रूप्येण तु धर्मत्वं तस्मान्नेन्द्रियगोचरः ॥
श्रेयोहिपुरुषप्रीतिः साद्रव्यगुण कर्मभिः।
चोदनालक्षणैस्साध्यातस्मात्तेष्वेवधर्मता ॥

'திரவ்யம் கிரியை குணம் முதலியதும் தர்மமென்று பின்பு ஸ்தாபிக்கப்படப்போகின்றது. அவைகள் இந்திரியங்களால் அறியப்படுவதுகளாயிருந்தாலும் அவ்விதம் இந்திரியங்களுக்குப் புலப்படும் திரவ்யம் குணம் கிரியை முதலிய ஸ்வரூபத்தால் அவைகளுக்கு தர்மத்தன்மை கிடையாது. பின்னையோவெனில் இதுகளுடைய ஸ்வர்க்கம் முதலிய சிரேயஸ்ஸுக்கு ஸாதனமாயிருக்கும் தன்மையானது எப்பொழுதும் வேதத்தாலேயே அறியப்படுகின்றது. பிரத்யக்ஷத்தால் அறியப்படுவதில்லை. அவ்வித சிரேயஸ் ஸாதனத்தன்மையால் அவைகள் தர்மமெனப்படும். ஆகையால் தர்மம் இந்திரியகோசரமில்லை. சிரேயஸ் என்பது புருஷனுடைய பிரீதி. அது திரவ்யம் குணம் கர்மம் ஆகிய வேதப்பிரமாணங்க

ளான மூன்று வஸ்துக்களால் ஸாதிக்கப்படுகின்றது. ஆகையால் அவைகளே தர்மங்களெனப்படும். அபூர்வம் தர்மமன்று'' என்று வார்த்திகத்திலும் சிரேயஸ்ஸாதனமாயிருக்கும் தன்மையைக் கொண்டு யாகம் முதலியது தர்மமென்று ஸ்பஷ்டமாய்க் கூறப் பட்டிருக்கிறது.

ஈண்டு மற்றொரு ஆசங்கை. அதாவது யாகம் முதலியதைச் செய்யுமிடத்தில் யாகம் முடிந்தபிறகு அதன் அங்கங்களின் லோபம் முதலிய வைகுண்யத்தால் அபூர்வத்தை உண்டுபண்ணுமல் இருக்கும் பொழுது அவ்விதயாகத்தைச் செய்தவனைத் தார்மிகன் என்று கூறுவதில்லை. அது அபூர்வம் தர்மமென்று சொன்னுல் தான் பொருந்தும். ஏனெனில் அவ்விடத்தில் அபூர்வமில்லாததால் அபூர்வம் தர்மமென்று சொன்னுல் அவனுக்குத் தார்மிகபதம் பொருந்தாது யாகம் தர்மமானுல் அது அவனிடமிருப்பதால் அவனைத் தார்மிகன் என்று கூறல் வேண்டும். ஆகையால் தர்மபதத்திற்கு யாகம் அர்த்தமானுல் தார்மிகனுயில்லாதவனையும் தார்மிகனென்று கூப்பிடும்படி வருதலாகிய அதிவியாப்திதோஷம் வருகிறது. இவ்விதமே யாகம் செய்தபிறகும் காலாந்தரத்தில் அந்த யாகம் செய்தவனைத் தார்மிகன் என்று கூறுகின்றுர்கள். அபூர்வம் தர்மமானுல் அது அப்பவும் இருப்பதால் அவனைத் தார்மிகன் என்று கூறுவது பொருந்தும். யாகம் தர்மமானுல் அது க்ஷணிகமானதால் காலாந்தரத்தில் இல்லாததால் அவனைத் தார்மிகன் என்று கூறுவது பொருந்தாது. ஆகையால் தார்மிகனைத் தார்மிகன்என்று கூறமுடியாமல்போவதாகிய அவ்யாப்திதோஷம் வருகிறது. ஆதலால் இவ்வித இருவித தோஷங்களுக்கும் இடமில்லாததால் அபூர்வம் தான் தர்மமென்று சொல்லவேண்டும் என்று. இதற்கு ஸமாதானம் கூறுவாம். யாகம் முதலியது தர்மமானுலும் அது அங்கலோபம்முதலிய வைகுண்யமில்லாதபொழுதுதான் இஷ்டஸாதனமாயிருப்பதால் தர்மமேயல்லாது வைகுண்யம் வந்த காலத்தில் அது தர்மமில்லை. ஆகையால் அவ்வித வைகுண்யம் வந்தவனிடத்தில் தார்மிகபதப்ரயோகமில்லை. ஆதலால் அதிவியாப்திதோஷத்திற்கு அவகாசமில்லை. இவ்விதமே யாகம் செய்தவனிடத்தில் யாகம் பிறகு இல்லாமல் போனுலும் அவன் யாகம் செய்தபொழுது அதைப்பார்த்த ஜனங்கள் அவ்விதம் முன்யாகம் செய்ததைமுன்னிட்டே பிறகு தார்மிகன் என்று

பிரயோகிக்கிறார்கள். அபூர்வம் பிறகு இருந்தபோதிலும் அதை வைத்து தார்மிகன் என்று வியவஹரிப்பதில்லை. அவ்வித அபூர்வம் அவர்களுக்குப் புலப்படாதல்லவா. அதனால்தான் அவன் முன் யாகம் செய்ததைப் பாராத ஜனங்கள் அப்பொழுது அவனிடம் அபூர்வமிருந்தும் அவனைத் தார்மிகன் என்று கூறுகிறதில்லை. ஆகையால் யாகமென்னும் தர்மம் அப்பொழுது இல்லாமல் போனாலும் முன் இருந்ததால் உபலக்ஷணமாகிய பின் இல்லாமல் போனாலும் முன் இருப்பதாலேயே வியாவர்த்தகமாகும் வஸ்துவாய்க்கொண்டு தார்மிகன்என்னும் வியவஹாரத்துக்குக்காரணமாவதால் அவனிடத்தில் தார்மிகபதப்பிரயோகம் பொருந்துமாதலால் அவ்யாப்திதோஷத்திற்கு அவகாசமில்லை. ஆகையால் யாகம் முதலியதே தர்மபதத்தின் பொருள். ஈண்டு மற்றொரு ஆசங்கை. அதாவது धर्मः क्षरति कीर्तनात् தர்மமானது கீர்த்தனத்தால் நான் இன்ன தர்மத்தைச் செய்தேன் என்று கூறுவதால் நசிக்கின்றது’ என்று கூறப்பட்டிருக்கிறது. இவ்விடத்தில் தர்மமென்பது யாகத்தையன்று, ஏனெனில் அது க்ஷணிகமானதால் முந்தியே நசித்துவிட்டது. நசிக்காமல் கீர்த்தனம் பண்ணும்பொழுது உள்ளது அபூர்வம்தான். அதுதான் கீர்த்தனத்தால் நசிக்கவேண்டியது. ஆதலால் அபூர்வம்தான் தர்மமென்று. இதற்கு இது ஸமாதானம். அதாவது கீழ்க்காட்டிய பல பிரமாணங்களால் யாகம் முதலியதுதான் தர்மமென்று ஸித்தித்ததால் தர்மமென்னும் பதத்திற்கு யாகம் முதலியதே. ஸிம்மம் என்னும் பதத்திற்குச் சிங்கம்போல் முக்யமாகிய அதாவது சக்தியென்னும் விருத்தியால் தெரிவிக்கப்படுவதாகிய பொருள். धर्मःक्षरतिकीर्तनात् என்பது முதலிய சிலவிடங்களில் தர்மபதத்திற்கு அபூர்வமானது யாகம் முதலியதாலுண்டாதலாகிய குணத்தை வைத்து வீர்யம் முதலிய குணத்தை வைத்து ஸிம்மம் என்னும் பதத்திற்கு மனுஷ்யன் போல் கௌணமாகிய அதாவது குணத்தைநிமித்தமாகக்கொண்ட கௌணீ என்னும் அமுக்யவிருத்தியால்தெரிவிக்கப்படுவதாகியபொருள்கௌணவிருத்தியைக்கொண்டே அபூர்வத்தில்தர்மபதபிரயோகம் பொருந்துவதால் அதிலும்முக்யவிருத்தியை தர்மபதத்திற்கு ஒப்புக்கொள்வதுகௌரவம், உசிதமன்று. இதுகாறும்கூறியவாற்றால் தர்மமென்பதுவேதவிஹிதமான யாகம் முதலியது என்றும்

அதர்மமென்பது வேதநிஷித்தமான களஞ்சபக்ஷணம்முதலியது என்றும்தர்மாதர்மபதார்த்தங்கள்இன்னதென்றுமுடிவாயிற்று.

(தொடரும்)

போலகம், ஸ்ரீ ராமசாஸ்திரிகள்,

---

# எனது வேண்டுகோள் யாது ?

(பாரதீபுத்திரன் எழுதியது.)

மதமாற்றம் பரமதநிந்தை வகுப்புவாதம் இவைகள் நாட்டில் ஒழியவேண்டும். ஸத்யம் அஹிம்ஸை ஸமாதானம் இவைகள் நாட்டில் பரவவேண்டும்.

ஸமீபகாலத்தில் ஹிந்துமதஸ்தர்களின் பிரிவினர்களாகிய ஸ்மார்த்தர் வைஷ்ணவர் மாத்வர் இவர்களுள் கலஹாஸ்பதமான காரியங்கள் ஒன்றும் நடக்காமலே இருந்துவந்திருக்கிறது. எந்த ஸ்மார்த்தரும் மாத்வரைத் தங்கள் வகுப்பில் இழுத்துக்கொள்ள முயற்சிசெய்திருப்பதாகத் தெரியவில்லை. இயற்கையாகவே தற்சமயம் மதமாற்றமாகிய பேய் நமது ஹிந்துமதத்திலோ அல்லது வகுப்புமாற்றம் அதன் பிரிவுகளுக்குள்ளேயோ இருந்துவரவில்லை. ஆனால் இதற்கு மாறான ரீதியிலே சிலர் வகுப்புமாறியிருக்கலாம். அல்லது பிறரை வகுப்புமாற்றம் செய்திருக்கலாம். அது லௌகிக ஆசையாலா அல்லது மதத்திலுள்ள வெறுப்பினாலா, அல்லது பிற மதத்திலுள்ள பிடிப்பினாலா என்பது தெரியவில்லை. எப்படியிருப்பினும் இத்தகைய வகுப்புமாற்றம் மதமாற்றம் இவைகள் புனிதமான ஓர் மதத்திற்கு களங்கமாகவே இருக்கிறது.

பிறமதத்திலிருந்து ஆள் சேர்ப்பதன்மூலம் ஏற்படும் ஆள் கட்டினால் காரியங்கள் ஸாதிக்கப்படலாம் என்பது நமது கொள்கைக்கு முறண்பட்டதாகும். கேவலம் ஸ்தூலமான சரீரக்கூண்டுகளைப்பெருக்கி அதன்மூலம் கார்யங்களை ஸாதித்துக்கொள்ள முற்படுவதும் ஸமாதானவாழ்விற்கு பங்கம்விளைவிப்பதாகும். இதற்கு உதாஹரணமாக ஆர்யஸமாஜம் சுத்தி முதலிய இயக்கங்களாலும் கான்பூர் முதலிய இடங்களில் அவைகளுக்கு எதிராக நடந்த

முஸ்லீம் இயக்கநடவடிக்கைகளாலும் ஏற்பட்ட பிரமாதமான சேதங்களை நன்கு அறியலாம். இத்துடன் 1920 முதல் ஆங்காங்கு நடந்துவரும் பெரிய வகுப்பு சச்சரவுகளும் அவ்வப்போது அறியப்பட்டிருக்கின்றன.

உண்மை இவ்வாறுயிருக்க மாத்வர்களை ஸ்மார்த்தவகுப்பார் மதமாற்றிவிடுவார்களோ என்ற அனுவச்யமான சந்தேகத்தை தானே ஏற்படுத்திக்கொண்டு அத்வைதமதத்தை தூற்ற முற்படுவதும் சமயத்திற்கேற்றவாறு பலவிதமாக பதில்சொல்லிக்கொண்டிருப்பதும் இதன்மூலம் மதச்சண்டையை விருத்திசெய்ய முற்படுவதும் வெறுக்கத்தக்கதாகும்.

அர்த்தவாதமுறையில் அத்வைதநூல்களிலும் த்வைதநூல்களிலும் சிற்சில இடங்களில் பிறஸித்தாந்தத்தை மறுத்து தனது ஸித்தாந்தத்தை நிலைநாட்ட சில இயற்கையான முறைகள் கையாளப்பட்டிருக்கலாம். அவைகளின் தாத்பர்யங்களை சிறிதுமுணராது விபரீதமான பாவங்களை சாந்தமாக பிரசாரம் செய்வதும் வருங்காலத்தில் தடுக்கமுடியாத சமாதானபங்கத்தை உண்டு பண்ணும்.

இந்த நிமிஷத்தில் இத்தகைய கேவலப்பிரசாரத்தின் பலன் ஏதோ தெய்வவசத்தால் திடீரென தோன்றாதிருப்பினும் பல மாதங்களுக்குப்பிறகாவது எதிரொலியான நிரந்தரமான அமைதியின்மைக்கு இது காரணமாக இருக்க நேரிடும்.

சில வகுப்பு வாதப்பத்திரிகைகளில் அத்வைத மதத்தைத் தகாதமுறையில் தாக்கி எழுதப்பட்டிருக்கிறது. சில நாட்களுக்கு முன் வாயளவில் இருந்த இச்செயல்கள் எழுத்திலும் பிரவேசித்துவிட்டன.

தற்சமயம் நமது தலைவர்கள் உதாசீனமாயிருந்தால் வகுப்பு வாதத்தின் எல்லை எதில் கொண்டுபோய்விடுமோ என்று நாம் பயப்படுகிறோம்.

எந்த நல்லெண்ணத்துடன் 'அத்வைதம் அவைதிகம்' என்று கூறப்பட்டிருப்பினும் சரி, யாதொரு கருணைப்பெருக்கால் வேறு நாஸ்திகமதமொன்றில் தங்கள் வகுப்பார் சேர்ந்துவிடாமல் தடுப்பதற்காக ஆத்மாக்ஷணார்த்தம் பிறமதத்தைத் தூற்றி சாந்தத்

துடன் சொல்லப்பட்டிருந்தாலும் சரியே அல்லது உலகத்தின் காமக்குரோதாதிபந்தங்களில் பற்றற்று எத்தகைய ஸ்வச்சமான நிர்மலத்தன்மையுடன் அவைதிகமெனும் பதம் பிரயோகிக்கப்பட்டிருந்தாலும் சரியே, இவைகள் யாவும் கொடுமையான த்வேஷத்தையும் ; வகுப்பு கலவரத்தையும் ஸமாதானபங்கத்தையும் ஏற்படுத்துவதாக இருந்துவருவதால் பொருப்பு வாய்ந்த மதத்தலைவர்களும் வகுப்பு பிரமுகர்களும் பிறர் மதத்தை நிந்திப்பதாகிய நெறியற்ற முறையை தகர்த்தெறிய அனுஷ்டானபூர்வமான ஏற்பாடுகளையும் அதற்கான மார்க்கங்களையும் ஒரு மகாநாடு கூட்டுவதன் மூலம் தீர்மானம் செய்வார்களாக.

---

# விசித்திரவிசாரம்.

(405-வது பக்கத்தொடர்ச்சி)

*ஸ்ரீசாஸ்திரிகள்:*— ‘தத்வமஸி’ என்ற மஹாவாக்கியத்தில் ஸமானுதிகரணப்ரயோகத்தால் அபேதம் போதிக்கப்படும் விஷயத்தில் பாதகமொன்றுமில்லை.

விசிஷ்டசைதன்யங்களுக்கு அபேதம் ஸம்பவிக்காமலிருப்பதே ஸமானுதிகரணப்பிரயோகத்தால் அபேதம் போதிக்கப்படுவதில் பாதகம் என்று த்வைதிகள் சொல்வது பொருத்தமுள்ளதன்று. எவைகளுக்கு விருத்ததர்மாக்கிராந்தத்வம் இருப்பதால் அஸம்பவம்ஏற்படுமோ அவைகளுக்குத்தான் அபேதத்தில்விருத்ததர்மாக்கிராந்தத்வம் பாதகமாகிறது. ஸமானுதிகரணப்பிரயோகத்தால் லக்ஷியார்த்தங்களுக்கு அபேதம் ஸம்பவிப்பதால் நிர்வாஹமேற்படும்போது அதைவிட்டு கௌணார்த்தத்தை ஸ்வீகரிப்பது நியாயமாகாது.

**அஸந்நேவ** என்றவிடத்தில் எவ்விதத்தாலும் ஸமானுதிகரணப் பிரயோகத்தால் முக்கியார்த்தாபேதபோதகத்துவம் ஸம்பவிக்காததால் அகதியாக அங்கு கௌணார்த்தம் கல்பிக்கப்படுகிறது. **தத்வமஸி** என்றவிடத்திலோவென்றால் விசிஷ்டங்களுக்கு ஐக்யம் ஸம்பவிக்காமற்போனாலும் சுத்தங்களுக்கு ஐக்யம் ஸம்பவிப்பதால்

விசிஷ்டர்களின் விருத்ததர்மாக்கிராந்தத்துவமான துசுத்தங்களின் அபேதத்தை போதிப்பதை தடுக்காது. இரண்டிற்கும் விஷயம் வேறானபடியால் பிரதிபத்திய பிரதிபந்தகபாவம் என்ற தோஷம் எங்ஙனம் ஏற்படும்?

ஸமானாதிகரணம் என்பது ஸமானவிபக்திகம் என்று கொள் ளப்படுகிறது. नीलो घट: என்ற இடத்தில் தர்மபேதங்களிருந் தாலும் நீலமான கடரூபமான் தர்மியொன்றேயானதால் எப்படி யோ அப்படியே இங்கு கண்டுகொள்ளவேண்டியது.

ஆரோபிதமான தர்மங்களுக்கு விரோதமிருந்தாலும் எதில் ஆரோபிக்கப்படுகிறதோ அந்த தர்மியொன்றாயிருப்பதால் தர்மி யின் அபேதத்தில் விரோதமில்லை.

तत्सम: என்று அபிப்பிராயங்கொண்டு அதற்குச் சமன். அதனால் உண்டானவன் என்பது முதலான அர்த்தம் பண்ண வேண்டியிருந்தால் அதற்காக 'தத்வமஸி' மஹாவாக்கியத்தை ஒன்பது தடவை விவரிக்கவேண்டிய அவசியமில்லை. துரூஹமாயி ருப்பதால் அடிக்கடி ஸம்சயம் ஜனிக்கவே அடிக்கடி அதைநீக்கித் தெளியப்படுத்தி அபேதத்தை போதிக்கவே தத்வமஸி மகாவாக்கி யத்தின் அப்பியாஸம் ஏற்பட்டிருக்கிறது.

மேலும் சாஸ்திரப்பிரமாணகத்துவம் என்பதற்கு சாஸ்திர ஜன்யயதார்த்தஞானவிஷயத்வம் என்று பொருள்கூறி பிரம்மமும் ஜீவப்ரம்மாபேதமும் சப்தஜன்யக்ஞானத்திற்கு விஷயமாகாது என்று சொல்லி மறுபடியும் சாஸ்திரப்ரமாணகத்துவத்தை ஒப்புக் கொள்கிற அத்வைதிகளிடம் 'என் தாய் மலடி' என்று நியாயத் திற்கு அவஸரம் நிகழ்கிறதுஎன்று த்வைதிகளால் சொல்லப்பட்ட விஷயம் அபத்தப்பிரலாபமே. அதாவது

சாஸ்திரப்பிரமாணகத்துவம்என்பதற்குசாஸ்திரஜன்யக்ஞான விஷயத்வம் சாஸ்திரதாத்பர்யவிஷயத்துவம் இவைகளில் ஒன்று என்று பொருள். பிரம்மம் சாஸ்திரதாத்பர்ய விஷயமானதால் சாஸ்திரப்பிரமாணகம் என்று சொல்கிற அத்வைதிகளுக்கு ஒரு தோஷமுமில்லை. த்வைதிகளின் மதத்தில்தான் கூறிய தோஷ மேற்படும்.

**सैन्धवमानय** என்ற இடத்தில் ஸைந்தவசப்தத்திற்கு லவணம் அச்வம் என்ற இரண்டு இடங்களிலும் பிரயோகமிருப்பதால் போஜனகாலத்தில் **सैन्धवमानय** என்றால் லவணத்தில் தாத்பர்யம் என்று எப்படி பிரகாணம் நியாமகமாகுமோ அதுபோல ஸகல வேதாந்தவாக்கியங்களுக்கும் பிரம்மத்தினிடம் தாத்பர்யம் என்ற விஷயத்தில் உபக்கிரமோபஸம்ஹாராதிரூபமான ஆறுவித தாத்பர்யலிங்கவிசிஷ்டப்பிரகாணமே நியாமகம்என்பது ராஜ மார்க்கம்.

உபாதிகள் ஸம்பவிக்கவில்லையென்பதை நிரூபித்துக்காட்டாததாலே இதற்குப்பரிஹாரம் சொல்லவேண்டிய அவச்யமில்லை

பிருஹதாரண்யகத்தில் **त्वं यज्ञ:** முதலான இடத்தில் பாதகமிருப்பதால் ஸமானாதிகாணப்ரயோகத்தால் அபேதபோதகத்வம் இல்லையென்று யாதொன்று த்வைதிகளால் சொல்லப்பட்டதோ அதுவும் அஸங்கதமே. இந்த தோஷத்திற்குப் பரிஹாரம் எங்கள் மதத்தில் பாதகமில்லாமற்போனால் ஸமானாதிகாணப்பிரயோகத்தால் அபேதபோதகத்வத்தை அங்கீகரிப்பதாலும் 'தத்வமஸி என்ற மகாவாக்கியத்தில் பாதகமில்லாததாலும் இந்த அவஸா மில்லை. ஆகையால் இது ஒரு கேள்வியல்ல.

ஜீவேச்வாதர்மங்கள் ஸ்படிகலௌஹித்தியம் போலல்ல' ஆனாலோ அக்னியில் ஔஷ்ண்யம் போலவும் நீரில் சைத்யம் போலவும் என்று உங்களுடைய ஆசார்யாளாலேயே சொல்லப்பட்டிருக்கிறது என்று யாதொரு சுலோகம் த்வைதிகளால் கூறப்பட்டதோ அதற்கு பாமதரீதியாக பூர்வபக்ஷ கிரந்தமானதால் ஸித்தாந்தத்திற்கு உபயோகமற்றதால் அதைக்கொண்டு பூர்வபக்ஷம் செய்கின்ற வித்வான்களுக்கே ஆச்ரிதமார்க்கத்தை விடுவது என்று தோஷம் ஏற்படுகிறது என்று சூசிக்கப்படுகிறது. ஆகையால் இது ஒரு கேள்வியல்ல.

ஆகையால் அஹேயானுபாதேய நித்யசித்த பிரும்மத்தை தெரியப்படுத்துவதால் வேதாந்தங்களுக்கு பிரமாண்யம் ஏற்படுவதால் த்வைதத்தில் அவைகளுக்கு பிராமாண்யம் பொருந்தாது' ஆனாலோ

'नेहनानास्ति किञ्चन' 'मृत्योः स मृत्युमाप्नोति' 'उदरमन्तरकुरुते' द्वितीयोद्वै भयं भवति இவை முதலான சுருதிகளாலும், क्षेत्रज्ञंचापि मां विद्धि என்பது முதலான ஸ்மிருதியாலும் आत्मेति तूपगच्छन्ति ग्राहयन्ति च ॥ என்பது முதலான ஸூத்திரத்தாலும் அகண்டார்த்தம்தெரிவதால்த்வைதஸித்தாந்தம் சாஸ்திரதாத்பர்யவிஷயமல்ல என்றும் அத்வைதம் வைதிகம் என்றும் சித்தாந்தம் சொல்லப்பட்டது.

இந்த சந்தர்பத்தில்:- $11\frac{1}{2}$-மணி நேரமாயிற்று. சபையில் தமிழில் விரிவாக எடுத்துரைக்க த்வைதாசாரியாள் சம்மதிக்காததால் விரிவான உபன்யாசம் அங்கு நிறுத்தப்பட்டு பிரம்மஸ்ரீ தேதியூர் சாஸ்திரிகளால் கல்யாணமண்டபத்தில் அத்வைதிகளின் வேண்டுகோளுக்கிணங்கி அதேதினம் ஸாயங்காலம் 4-மணிமுதல் அஸ்தமனம்வரை விரிவாக உரைக்கப்பட்டது.

அதற்குப் பிறகும் மறுநாளும் சாஸ்திரிகள் வாதம் செய்யவும் லேகப்ரதிலேகரூபமாய் எழுதவும் மத்யஸ்தர்களைக்கொண்டு த்வைதாசாரியாளுக்கு அறிவித்தார்கள். ஆனாலும் அவ்விதம் ஏற்படவில்லை. இவ்விஷயங்களைக் கூடியமட்டிலும் சுருக்கமாகவே எழுதிமுடித்தேன்,

மறுபடியும் தனிமையில் த்வைதிகளின் மத்தியில் சில மத்யஸ்தர்கள்மூலமாக நேரே அவர்களிடம் பேசிக்கொண்ட விவாதத்தைமற்றொரு சந்தர்பத்தில் வெளியிடுகிறேன்.

---

# ஓர் திருத்தம்.

ஆர்யதர்மம் 18-வது ஸஞ்சிகையில் 405-வது பக்கத்தில் இந்த ஸந்தர்ப்பத்தில் கும்பகோணத்தில் பூர்வபக்ஷத்தோடு முடித்து ஸித்தாந்தஞ் செய்ய அவகாசம் கொடாமல் எப்படி கோலாஹலத்தோடே உபஸம்ஹரிக்கப் பட்டதோ அப்படி இங்கு செய்யக்கூடாது என்றுதடஸ்தர்களால் சொல்லப்பட்டது என்று எழுதப்பட்டிருக்கிறது.

நான் (1—6—31) இல் கும்பகோணம் வந்து சில முக்கிய சிநேகிதர்களை விசாரித்ததில் கீழ்கண்டதற்கு, மாறுதலாகவே நடந்ததாகத் தெரிகிறது. — அதாவது

த்வைதாச்சார்யாளின் பூர்வபக்ஷத்திற்கு சமாதானம் கூறப் பட்டிருந்தாலும், முன்பு ஏற்படுத்திக்கொண்ட கண்டிஷன் பிரகாரம் கீதையைத்தவிர வேறு சில புராணவசனங்களைத் தங்கள் பக்ஷத்திற்கு சாதகமாக அவர்கள் எடுத்துக் கூறியதின் பேரில் ப்ரதிக்ஞாபங்கம் ஏற்பட்டுவிட்டது என்றும்,, க்ஷேத்ரக்ஞபதத்திற்கு முதல்தினம் ஒருவிதமாகவும், மறுதினம்வேறு விதமாகவும், அவர்கள் அர்த்தம்கூறியதால், ஸத்யபந்தவறிவிட்டத்வைதாச்சார்யாளிடம் வாதம் ஒழுங்கல்லவென்றுந்தான் சபை நின்றுவிட்டது என்று தெரிகிறது.

K. V. சுப்பிரமணியசாஸ்திரி.

---

# ஸனாதன தர்ம ஸம்ரக்ஷண ஸபை.

(391-வது பக்கத்தொடர்ச்சி)

## அக்ராஸனர்பிரசங்கம்.

வேதங்களையும் சாஸ்திரங்களையும் அவைகளில் இருக்கும் உபதேசமொழிகளையும் பூர்ண நம்பிக்கையுடன் அனுஷ்டிக்கும் ஸனாதனி ஹிந்துக்களுக்கு வேதம் எப்போதும் நித்யம் என்ற நம்பிக்கை. இவ்விதம் உண்மை. நம்பிக்கையை நம் மத வேதங்களில் வைப்பவன் கிறிஸ்தவனுய் பிறந்திருந்தால் அவன் மனது ஸம்மந்தப் பட்டமட்டில் அவன் ஹிந்துதான். சரீரத்தாலும் நடத்தையாலும் சொல்லவில்லை. எல்லாமதத்திற்கும் உண்மை நம்பிக்கை என்பது தான் அடிவேர். ஆகவே வேதங்களையும் சாஸ்திரங்களையும் உண்மையாய் களங்கமில்லாமல் நம்பி நம் தர்மத்தை நடத்துவதால் அது நமது இகலோக காரியங்களிலும் பாலோக காரியங்களிலும் மனிதனை மேலாக செய்யும் என்றும் நமது உயிரை அது தான் இருக்கவோ, இறக்கவோசெய்யும் என்றும் தான் ஸனாதன தர்மிகளான நமது கொள்கை. ஸனாதனம் என்றால் அழிவற்றது எப்போதும் மாறாமல் ஒரேவிதமாய் நிற்பதென்றுபொருள். அதன்

படி வேதம் ஸனாதனம். வேதங்களும் சாஸ்திரங்களும் தான் தர்மம் இன்னதென்றும் அதர்மம் இன்னதென்றும்விளக்கிக்கொடுக்கிறது, ஒவ்வொரு மனிதனும் இவைகளை நம்பாது தர்மாதர்மத்தை தன் மனதுப்படி தீர்மானிக்க தன் புத்திக்கும் மனதுக்கும் ஸ்வாதந்திரியம் கொடுப்பானுகில்ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு ஸெகண்டுக்கும் தர்மாதர்மம் மாறிக்கொண்டேபோகும். அதனுல் என்ன நேரிடும் என்பதை நாமே அறியலாம். ஆதல்பற்றியே ஸ்ரீ கிருஷ்ணபகவான்,

तस्माच्छास्त्रं प्रमाणंते कार्याकार्यव्यवस्थितौ ।
ज्ञात्वाशास्त्रविधानोक्तं कर्मकर्तुमिहार्हसि ॥

ஆதலால் கார்யம் அகார்யம் என்பதை நிச்சயம் செய்வதில் உனக்கு சாஸ்திரம்தான் பிரமாணம். ஆகவே சாஸ்திரத்தில் கூறப்பட்டபடியே இங்கு நீ கன்மம் செய்யக் கடமைப்பட்டிருக்கிறுய். என்கிறுர். செய்யவேண்டியதையும் செய்யக்கூடாததையும் நம் புத்தி விசேஷத்தால் நிச்சயிக்கவே கூடாது என்பதையே அடுத்தும் கூறுகிறுர்.

यःशास्त्रविधिमुत्सृज्यवर्तते कामकारतः ।
न स सिद्धिमवाप्नोति न सुखं न परांगतिम् ॥

எவன் சாஸ்திரத்தின் விதியை மீறி தன் இஷ்டப்படி நடப்பானே அவன் இவ்வுலகில் கார்யசித்தியையும் சுகத்தையும் அடையமாட்டான் பரகதியும் கிடையாது என்றுர். சாஸ்திரத்திற்கூறிய விதியையும் நிஷேதத்தையும் நம்பாதவனுக்கு இகபர சுகமில்லை என்பதே நிச்சயம்.

நம் சாஸ்திரங்கள் ராஜநீதி வியாபாரம், பிழைப்புக்கு வழி மருந்து ஆயுஸ்ஸை வளர்ப்பது முதலிய பல வழிகளிலும் சூக்ஷ்ம ஞானத்தை வளர்க்கிறது. நம் சாஸ்திரங்களை நாம் பூரண நம்பிக்கையுடன் அனுஷ்டித்துக்கொண்டிருந்தவரையிலும் சுகத்தோடும் சந்தோஷத்தோடும் சகோதரத்தன்மையோடும் நாம் வாழ்ந்து வந்திருக்கிறேம்.

அன்னியதேசத்திலிருந்து நம் ஸனாதனதேசத்தை முதன் முதற் காணவந்த மாக்ஸ்மில்லர் முதலிய அறிவாளிகள் நம் தேச

ஜனங்கள் சந்தோஷமாயும் ஸமாதானமாயும் அவரவர்கள் கட்டுப்பாடாய் தன் தன் வேலையைச் செய்துகொண்டு ஆடம்பரமின்றி ஏதோ ஒரு முக்கிய கொள்கையுடன் சுகமாய்வாழ்வதைப்பார்த்து அதற்குக் காரணம் அவர்கள் வேதசாஸ்திரானுஷ்டானத்தின் நம்பிக்கை தான் என்று புத்தகத்தில் எழுதிவைத்திருக்கிறார்கள். இந்தியாதான் மற்ற நம் தேசங்களிலும் நாகரீகத்திலும் செல்வத்திலும் ஓங்கி வளர்ந்திருக்கிறதென்றும் இது எவ்வளவு காலமாய் இவ்விதமிருக்கிறதென்று அளவிடமுடியவில்லை என்றும் ஆர்ய பாஷையென்ற ஸம்ஸ்கிருதபாஷையின்படிப்புதான் அவர்களதுஎல்லா அந்தஸ்துக்கும் மூலகாரணமென்றும் புகழ்ந்தார்கள். ஆகவே இவ்வளவு புகழ்ச்சிக்குக் காரணம் நம் வேதசாஸ்திரானுஷ்டானம் தான் நம் தேச நாகரீக மஹிமையை கவனியுங்கள்.

காட்டில் குடிசையில் தவம் புரிந்துகொண்டிருந்த பாரத்வாஜ மகரிஷியை ஸ்ரீ ராமனைத்தேடப் புறப்பட்ட பரதன் ஸைன்யங்களோடு அடைந்தான். அப்போதவர் தன் தவத்தின் மகிமையால் அவனுக்கும் அவனைச் சார்ந்தவர்களுக்கும் யோக்யதைக்குத்தகுந்தபடி அரண்மனை முதலியவைகளையும் பற்பலவிதமான ஆகாரங்களையும் குளம் குளமாய் பாயசங்களையும் பணிவிடை செய்ய தாதிமார்களையும் ஸ்ருஷ்டித்தாரென்றும்தேவஸ்திரீகளைப்பாடவும் அதற்குத்தகுந்தபடி பில்வவிருக்ஷங்களை மிருதங்கம்வாசிக்கும்படியும் செய்ததாய் ராமாயணத்தில் காண்கிறோம். இவர் வம்சத்தில் பிறந்த நாம் ஏதோ கிராமபூன் முதலிய வாத்யங்களை கண்டுமகிழ்கிறோம். இப்போது நாம் வேதமந்திரங்களாலும் தவத்தாலும் பற்பல அறிய விஷயங்களைச் செய்யக்கூடும்.

நம்முடைய நாடு எப்போதும் மகாத்மாக்களையும் மகரிஷிகளையுமே உண்டுபண்ணக் கூடியது.

இக்காலத்தியவர்கள் இவ்வுலக இன்பத்திற்காக புதிதுபுதிதாய் உண்டுபண்ணும் யந்திரம் முதலிய சாமான்களையும் அதை அனுபவிக்கும் பல வழியையுமே நாகரீகமென்று கொண்டாடுவதுபோல் நம் முன்னோர்கள் நினைத்தார்களில்லை.

இவ்வுலகில் இன்பத்தை வளர்க்காமல் வரவர ஒழித்துதர்ணுய் மிக மேன்மையையும் தேஜஸ்ஸையும் வேதசாஸ்திரங்களின்படி

குருபதேசத்தால் அறிந்து பரலோகத்தையும் பிறகு பரமாத்மஸ்வ ரூபத்தையும் பெறப்பாடுபடுவதையே நம் முன்னோர்கள் நாகரீக மென நினைத்தார்கள்.

நீங்கள் நம் சாஸ்திரமுறையாலேயே ஒப்பற்றபூகோளசாஸ்தி ரம் வானசாஸ்திரம் ஆயுர்வேதமென்ற உண்மையான வைத்திய சாஸ்திரம் மற்றுமுள்ள தச்சு சாஸ்திரம் முதலிய ஸமஸ்தசாஸ்தி ரங்களேயும் அறியலாம். இவைகளையெல்லாம் நம் பரமாசாரியா ளான பகவத்பாதர் முதலிய அவதார புருஷர்களால்எழுதப்பட்ட கிரந்தங்களிலிருந்து நன்கு அறியலாம். இப்போது நீங்கள்கொண் டாடும் ஒற்றுமை என்பது புதிதல்ல. இது ராமாயணத்திலும்மகா பாரதத்திலும் இருக்கிறது.

முற்காலத்தில் பிராமணர்கள் யாவரும் தங்கள் பிறப்பை ஒழிப்பதற்காக பாடுபட்டு தங்களுக்கு கௌரவமென்பதையே அறியாமல் ஹிதமான காரியங்களையே செய்துவந்தார்களேதவிர ஸ்வய நலம் கருதவேண்டுமென்பதே அவர்களுக்குத் தெரியாமல் இருந்தது. பிராமணனென்றால் பிர்மஞானத்தை அடைபவன் என்றே பொருள்.

பூமியும் அதிலுள்ளஐசுவர்யம்யாவும் பிராமணனுடையதுதான் என்று மனு கூறுகின்றார். பிராமணன் தனக்கும் பொருள் நிறைய வேண்டுமென்றாவது அல்லது உயர்ந்த பதவி தனக்கு வேண்டு மென்றாவது எண்ணாமலிருந்தான்.உண்மையான பிர்மஞானத்தை யடைவது தான் தனக்கு மேன்மையென்று நினைத்தான்.

உலகிற்கெல்லாம் எப்போதும் ஸந்தோஷத்தை விளைவிக்க வேண்டுமென்று எண்ணின மகரிஷிகளெல்லாம் உயர்ந்த மாட மாளிகை கோபுரங்களோடு கூடிய அரண்மனையில் வசிக்கவே இல்லை. உலகக்ஷேமம் செய்த அவர்கள் வசித்தவிடம் அடர்ந்த காடுதான் இவ்விதம் பிராமணர்கள் ஸ்வயநலம் கருதாமலிருந்த தாற்றான் அக்காலத்திலவர்கள் மிகவும் பூஜிக்கப்பட்டார்கள். பிரா மணர்கள் சாஸ்திராநுஷ்டானப்படி நடப்பது வெளிப்ரகாசத்திற் காகவல்ல. பிராமணர்கள் மறுலோகத்தில் சுகமாய் வாழலாம் என்ற நம்பிக்கை கொண்டு இந்தப் பிறவியில் கஷ்டப்படவேண் டியதுதான் என்று நினைத்தார்கள். இயற்கையில் பிராமணனின் மனது எப்போதும் ஸமபுத்தியாகவே இருக்கும்.

ஒரு சமயம் பிராமணர்களுக்குக் கோபம் வந்தால் அது பிற னுக்கு கடைசியாய் நன்மையிலேயே முடியும். ஒவ்வொரு தின மும் பிராமணன் படுக்கையை விட்டு எழுந்திருக்கும்போதே लोकास्समस्तास्सुखिनोभवन्तु உலகமெல்லாம் க்ஷேமமாய் இருக்கட் டும் என்று சொல்கிறுன். இம்மாதிரியான சுத்த மனதையும் அனுஷ்டானத்தையும வேறு எந்த உலகிற் பார்க்கமுடியும். இதா ஜனங்களது தாழ்மைக்கு இத்தகைய பிராமணன் காரணமாவானு? பிராமணன் தான் ஸ்வயநலம் பாராட்டாதவனுக்கு வழிகாட்டி பிராமணன் இல்லாவிடில் நம் தேசத்திற்கு வழிகாட்டி யாரும் இல்லே. அறிவென்பது நமது புண்யமான வேதங்களிலும் சாஸ் திரங்களிலும் தான் அடங்கியிருக்கிறது. அன்னிய தேசத்தவர் கள் இவ்விதம் அறிவுக்களஞ்சியமான புஸ்தகங்களே வாரிக்கொ ண்டு போகிறுர்கள், இன்றைக்கும் ஜர்மனி அமெரிக்கா முதலிய தேசங்களில் நமது புத்தகங்களுக்குத் தான் மதிப்பு ஏறிக்கொண் டிருக்கிறது. (தொடரும்) M, N, சுப்ரமண்யசாஸ்திரிகள்.

# ஓர் ஸமரஸவார்த்தை.

(407-வது பக்கத்தொடர்ச்சி)

ஸ்ரீ ஸ்வாமிகள் சார்பாக வெளியிடப்பட்டுள்ள ஸ்ரீ உத் திராதிமடம் ஸ்வாமிகளின் உபதேசம் என்னும் ஆங்கிலப் புத்த கத்தில் அத்வைதம் அவைதிகம் என்ற சொல்பாணம் தொடுக்கப் பட்டிருக்கிறது. எனவே ஸ்ரீ ஸ்வாமிகள் அத்வைதம் அவை திகம் என்று வெளியிட்டிருப்பது பொய்யாக ஆகுமா அல்லது மெய்யாக ஆகுமா ?

அத்வைதம் அவைதிகம் என்ற சப்தத்திற்கு வேறுக (வ்யாக் யானத்தால் ஏற்படும்) பொருளே ஸ்ரீ ஸ்வாமிகள் கூறியதாக R. V, கிருஷ்ணமாசாரியார் என்ற ஒருவர் வரைந்திருக்கிறதாகத் தெரியவருகிறது. அபிதாவ்யாபாரத்தைக் (நேர்பொருள்) காட் டிலும் வேறுன முறையால் கிடைக்கப்பெறும் அப்பொருள் ஒரு வாறு வலேயினின்றும் தப்புவதற்காக கல்பிக்கப்பட்ட யுக்தியின் பலமா? அல்லது சப்தத்தை வாபீஸ் வாங்கிக்கொள்ளத்தயங்கி அர்த்தத்தில் பேதத்தை ஸ்தாபிக்கமுயற்சிக்கும் ஸித்தாந்த முறையா?

எப்படியிருப்பினும் தன்போல் தன்னாலேயோ அல்லது பிறராலேயோ பரப்பப்பட்டிருக்கும் அத்வைதம் அவைதிகம் என்ற த்வேஷம் கலகம் பகைமை பயங்காரத்தநூறு இவைகளை உண்டாக்குவதற்கு காரணமாக உள்ள கேவலமான சப்தத்தை பெருந்தன்மையாக சிறப்புடன் வாபீஸ் வாங்கிக்கொள்வதுமன்றி பத்திரிகைகளிலும் பிரசுரிக்கமுற்படுவார்களா? அல்லது தொடுத்தகாரியத்தில் ஊக்கம் குன்றாதவராய்ப் போர் தொடுக்கமுயற்சிப்பார்களா அல்லது இரண்டுமன்றி ஒருவாறு மௌனம் சாதித்து தர்மவிஷயங்களைப் பிரசாரம்செய்ய முற்படுவார்களா?

ஓர் ஸமரஸாபிமானி.

---

# வாரவிருத்தாந்தம்.

இத்துடன் நிற்குமோ ? தேசீயத்திற்காகத்தோன்றிய ஸத்யாக்ரஹம் முற்றி பலவிடங்களில் ப்ரவேசிக்கிறது. கள்ளிக்கோட்டையில் ஆலயத்திற்குச் சொந்தமான ஓர் தடாகத்தில் தகாத ஒருவர் ஸ்நானம் செய்தனராம். அதை அதிகாரிகள் தடுக்க பத்துபேருடன் மறுநாள் வருவதாக அதிகாரிகளுக்கறிவித்து அவர் ஸ்நானம் செய்தனராம். இவர்களது முரட்டுச் செயலுக்கஞ்சி அதிகாரிகள் பேசாமலிருந்துவிட்டனர். இப்பிடிவாத முரட்டு ஆக்ரஹம் இத்துடன் நிற்காது. தனிப்பட்டவர் சொத்திலும் ஜாதிகுல ஆசாரத்திலும் நுழையுமோ என அஞ்சுகிறோம்.

கற்றகுருவிடமே காட்டுகிறார்— ஸத்யாக்ரஹத்தின் உயர்நிலை உண்ணாவிரதம். காங்கிரஸில் ஏற்பட்ட விவாதத்தில் தன் கக்ஷி ஜயிக்கலக்ஷ்மணபுரியில் ஒருவர் உண்ணாவிரதமிருக்கிறார். அதை நிறுத்தவேண்டுமென ஸத்யாக்ரஹகுருவான ஸ்ரீகாந்தி தந்தி கொடுத்தார். இவர் குருவுக்கு மிஞ்சிய சிஷ்யர்போலும், முடியாதென பதில் தந்தி கொடுத்தார். சிஷ்யர்பட்டினியையகற்ற குருவும் பட்டினியிருப்பரோ? பாமரஜனங்களைத்தகாதவழியில் கிளப்பிவிட்டால் அடக்கமுடியாதென்றே திலகர் இதை ஏற்கவில்லை.

ஸ்வபுத்தி வேண்டாமா ? 21வ பாலக்காட்டில் கல்விமந்திரி கல்விஸபையைத் திறந்தாராம். தற்காலபடிப்பின்படி எழுதப் படிக்கத்தெரியாதவர்களைக் கல்லாதவரெனக்கூடாது, பல விஷயங் களை நன்கு கற்றவர் இந்தியர்இதரதேசஸ்திரீகளைவிட அதிகவிஷய மறிந்தவர் இன்னாட்டுப்பெண்கள் என மலோனி என்ற துரை சொன்னதை ப்ரமாணமாகக்காட்டி பேசினார். தற்கால நாகரீகத் தால் மறைந்த கண்ணைத் திறக்க மேனாட்டுகுருவே வேண்டியிருக் கிறதே என்றுதான் வருத்தம். இனி பெண்பாடசாலைகளில் ஆங் கிலபரீக்ஷை பாடத்தை நிறுத்தி சிறுவயதில் ராமாயணபாரதாதி நீதிதர்மகதைகளைக் கேட்கும்படி செய்வரோ ?

ஆட்டிவைப்பவர் யார் ? மேயோ என்ற ஓர் அமெரிக்ககன் னிகை இந்திய அரசாங்கச்செலவில் விருந்துண்டு இங்கு சிலநாள் தங்கி இந்தியதாய் என ஓர் புத்தகத்தை வெளியிட்டதை நேயரறி வர். இவளே அப்புத்தகத்திற்கு இரண்டாம்பாகமாக மற்றொன் றை ஸமீபத்தில் பிரசுரித்தாள். இதில் பால்யவிவாஹவிஷயமும் சாரதாசட்டம் அமுல் நடவாததைப்பற்றியும் விவரித்திருக்கிறாள். தன்னைப்போல் விவாஹமற்று வேறுவகையில் இந்தியாவைதிறுத்த இவ்வாலிழந்த நரி பாடுபடுகிறதுபோலும். எவ்வகையிலும் இந்தி யர் ஸ்வராஜ்யத்திற்கர்ஹரல்ல என்பதை விளக்க எவரேனும் இவ ளைத் தூண்டுகிறார்களோ என ஐயமுறுகிறோம்.

திருப்பதிக்கோர் தீங்கு. நாகரீகப்பேயின் கடாக்ஷம் ஆலயங் களில் விழாமலிருப்பதில்லை. முற்காலத்திய ஆலயம்போல் அல் லது ஏகதேசமண்டபம்போல் கட்ட இக்காலத்தவருக்கு புத்தியு மில்லை சக்தியுமில்லை. ஆனால் அதை அழிக்காமலிருந்தால்போது மென்ற காலமிது. திருப்பதியில் வரும் வருமானத்தை ஆங்கிலக் கல்விக்கும் அரசாங்கஊழியருக்கும் அதிகாரிக்கு உபசாரமளிக்க வும் சென்னை சட்டசபையில் ஓர் சட்டமியற்ற ராஜப்ரதிநிதி உத் திரவளித்தாராம். மதாபிமானிகள் சட்டசபையில் புகும் வரை இன்னும் பல பேராபத்து நேரிடும். மஹந்துவும் மஹாஜநங் களும் முளையிலேயே இதை அழிக்க முன்வருக.

தடுக்கவேண்டும். அமெரிக்காவில் சிறுவர்களது செயல் தீர மானதென மதிக்கப்பட்டுவந்தது. ஸைகளால் உலகைச் சுற்றுப வன் காலால் உலகைச் சுற்றுபவன்போன்றவர் மரியாதை செய்

யப்பட்டனர். அது முற்றி குளத்திலேயே 3-நாளிருப்பது, மாத்தின்மீதே 4-நாளிருப்பது என சிலர் ஆரம்பித்தனர். மறுபடியும் குரங்கு முதலிய ஜன்மாக்களை எடுத்து வந்தவழியே செல்கின்றனரா என அஞ்சி அரசாங்கம் இவர்களைக் கடுமையாக சிக்ஷித்து அடக்கியது. அந்நிலைக்கு ஸத்யாக்ரஹம் வந்துவிட்டது. ஜப்பானில் தொழிலாளி முதலாளி சண்டை தீரும் வரை உண்பதில்லை என ஓர் சிறுவன் கூறி கூரைமேலிருந்தானும். விபரீதமில்லை வருவதற்குள் இதை அடக்கவேண்டும்.

மோஹத்தினல் தீங்கு. லண்டனில் இவ்வளவு தொகை பாங்கில் கட்டி சிலவாமுறைகளுக்குட்பட்டால் பாம்பரையாக 'லார்ட்' என ஒருவர் அழைக்கப்படுவர். லார்ட் ஸபையில் வீற்றிருக்கலாம் என ஓர் ஸம்பிரதாயமுண்டு. இதில் மயங்கி ஸின்ஹ என்ற இந்தியர் லார்டாஜா அவர் புதல்வனுக்கு போகும்போது இந்திய முறைப்படி விவாஹமானவருக்குப் பிறந்தவராதலின் உமக்குப் பதவி இல்லை என்றனர். அப்பணமாவது திரும்புமா? டம்பத்தில் ஆசைகொண்டோர் கதி இதுதான். மற்றவராவது ஜாக்ரதையாயிருப்பரோ?

மூடநம்பிக்கை. நம்மவரில் அநேக ஜனங்கள் யாதாமொன்றில் சிறந்த ஒருவரை எல்லாமறிந்தவராக நினைத்து அங்கு தன் குறையை நீக்க வழி கேட்பது வழக்கம். முன்னொருநாள் தான் சீமை போயிருந்தபோது தன் மனைவி கர்ப்பிணியானுள். அவளைக் கொள்வதா, தள்ளுவதா என ஒருவர் ஸ்ரீயுதகாந்தியைக்கேட்டார். சென்றவாரம் ஒருவர் பெண்கள் உடன்கட்டை ஏறுவது நியாயமா எனக்கேட்டார். அவரும் வஞ்சனையில்லாமல் தன்னை ஸர்வக்ஞனக நினைத்து பதில்சொல்லத் தவருவதில்லை. இது மூடத்தனமான செயல். கணவனையிழந்தவள் தேசத்தைக்கொண்டு புரிய வேண்டுமென்ருர். இதில் எது மூடத்தனமென நமக்கு விளங்கவில்லை.

பணத்தால் பிணமும் கிட்டவில்லை:- மன்ஞர்குடி பிராமண வகுப்பைச் சார்ந்த ஒருவர் பட்டம்பெற்று பணந்தேட சீமை சென்ருர். அப்போதே இவரது ஜாதிமத குல தர்மங்களெல்லாம் இவரைவிட்டு வேரிடம் சென்றிருக்கும். ஏதோ வியாதியால் அங்கிறந்தார். பெற்ருேரும் மனைவியும் மற்ருேரும் பிணத்தைக்

கூட கண்ணால் காணமுடியவில்லை. ஐயோ! என்னபணம் மதக் கடமைக்குட்பட்டு கிடைத்ததைக்கொண்டு ஸந்தோஷிப்பதே தர்மம்.

ஏன் ஒழிக்கவேண்டும்?- முத்துப்பேட்டையில் கூடிய ஆதி திராவிடர் கூட்டம் ஸ்வாராஜயம் கொடுப்பதற்குமுன் ஜாதிவித்யாஸத்தை ஒழிக்க அரசாங்கத்தை வேண்டி ஓர் தீர்மானம்செய்தது. இத்தனையுகமாக இல்லாத துன்பம் இவர்களுக்கு என்ன புதிதாக வந்துவிட்டது. கிளிப்பிள்ளைபோல் யாரோ எதற்கோ சொன்ன சொல்லைத் திரும்பக் கூறுவதில் பயனென்ன?

அறியாமை:- காங்கிரஸ்ஸில் ஈடுபட்டவர் அதிலும் சிறை சென்று வந்தவர் தங்களைத்தாங்களே தைவமாக நினைத்துதங்கள் சொற்படி உலகம் நடக்கவேண்டுமென்கின்றனர். அதைச்சார்ந்த சிலர்நெல்லூரில் நடந்த ஸோமயாகத்திற்கு எதிர் பிரசாரம்செய்து ஏதேதோ உபன்சித்தனர். ஆஸ்திகரும் தேசீய சபையில் சேர்ந்து மதவிரோதமானதை திருத்த முயலவேண்டும். அவர்களது அறியாமையை அகற்ற ஏதேனும் வழிதேடவேண்டும்.

செல்வமழிகிறது:- தஞ்சை அரண்மனையில் மந்திரியாயிருந்த ஓர் பிராமணன் நவாபுவினிடம் தனது மந்திரசக்திக்கு பரிசாக ஆரணிஜாகீரைப் பெற்றதாக பெரியோர் கூறுவர். நமக்கு அழிவில்லாச் செல்வம் வேதமாம். அதை அந்த ஸந்ததி இழந்தது. இதையும் இழந்து ஜீவனும்சம் பெற்றுவந்தார். தற்காலஜாகீர்தார் சென்ற வாரம் உயிரையும் இழந்தார். இவர் பிள்ளைகள் சீமையில் படிக்கின்றனர். இவர் மற்றதை இழந்ததற்கு நாம் வருந்தவில்லை. எதற்காக இந்த ஜாகீர் கிடைத்ததோ அதை இழந்ததற்குத்தான் வருந்துகிறோம். இதேபோல் வேதவிருத்திமான்யம் பெற்றோர் ஸந்ததி வேதத்தை இழந்துவருகிறது வருந்ததக்கது.

வரவேற்கிறோம்:- கல்கத்தாவில் வரதக்ஷிணையை ஒழிக்க ஓர் மஹாநாடு ஜூன் மாதத்தில் கூடுகிறது. இச்சபைக்கு நல்வழி வரவுகூறி நம் நாட்டிலும் பொது ஜனங்கள் சபைகூடி இக்கெட்ட வழக்கத்தை ஒழிக்க ஓர் வகைத் தேடும்படி வேண்டுகிறோம்.

வே. ஸோமதேவசர்மா.